அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI
Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624



அ.எண் : 78/2017

தேதி : 31/08/2017

**நகல் ஓட்டுனர் உரிமங்களை வைத்திருக்க அனுமதிக்க வேண்டும்.**

**அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின்**
**நிறுவனத் தலைவர், திரு.ஆர்.சரத்குமார் வலியுறுத்தல்.**

வாகன ஓட்டிகள் அசல் ஓட்டுனர் உரிமங்களைத் தங்களோடு வைத்திருக்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது. அசல் உரிமங்கள் சந்தர்ப்பவசத்தால் தொலைந்துவிட்டால் மீண்டும் புதுப்பிப்பதில் ஏற்படும் இன்னல்களை கருத்தில் கொண்டு பெரும்பாலும் அசல் உரிமங்களை வீட்டில் வைத்துவிட்டு, நகல்களை கூட வைத்திருப்பது வழக்கமாக உள்ளது. மேலும் சில நிறுவனங்களும், கால் டாக்ஸி நிறுவனங்களும், ஓட்டுனர்களை பணியமர்த்தும் தனியாரும் நிறுவனங்களும் அசல் உரிமங்களை சில காரணங்களுக்காக வாங்கி வைத்துக்கொள்ளும் வழக்கம் உள்ளது. இத்தகைய சூழலில் நகல் உரிமங்களையே ஓட்டுனர்கள் வைத்திருக்க நேர்கின்றது.

எனவே, இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு இன்றுமுதல் வாகனங்களின் அசல் உரிமங்கள் வைத்திருக்கவேண்டும் என்ற உத்தரவைத் திரும்பப் பெறவேண்டும் என்று தமிழக அரசை வலியுறுத்துகிறேன். உரிமம் எண்ணைக் கொண்டு தற்போதைய தொழில்நுட்ப வசதிகளில் ஓட்டுனர் குறித்த அனைத்து விவரங்களையும் உடனடியாக பெற்றுவிட முடியும் என்ற நிலையில், நகல் உரிமங்களை வைத்திருக்க அனுமதிக்க வேண்டும் என்று தமிழக அரசை சமத்துவ மக்கள் கட்சி சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி வணக்கம்,
உழைப்பவரே உயர்ந்தவர்

என்றும் அன்புடன்

**ஆர்.சரத்குமார்**
தலைவர் - பொதுச்செயலாளர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com